அங்கு ஒரு அரசு மருத்துவமனை அமைக்கப்படுமா? இல்லையென்றால், ஆரம்பச் சுகாதார நிலையத்தை, 20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக அப்கிரேட் செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, பென்னாகரத்தைப் பொறுத்த அளவிலே, இப்பொழுது தாலுக்காவாக்கப் பட்டிருக்கக்கூடிய காரணத்தால், அங்கே ஒரு தாலுக்கா மருத்துவமனை தேவை என்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. இப்பொழுதிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தி ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்குவதா இல்லாவிட்டால், தாலுக்கா மருத்துவ மனையாக ஆக்குவதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, உரிய நேரத்தில், தக்க முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பொன்னாகரம் வட்டத்திலே சுமார் 30 கிலோமீட்டர் அளவுக்கு எந்தவிதமான ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது வேறு சுகாதார நிலையமோ இல்லை. இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்ய வசதி இல்லை. அப்படிச் செய்ய வேண்டுமென்றால், 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தர்மபுரி அரசு மருத்துவமனைக்குப் போக வேண்டிய நிலை உள்ளது. அதையெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கவனித்து, பென்னாகரம் நகரத்திற்கு உடனடியாக அரசு மருத்துவ மனை ஏற்பாடு செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இது நியாயமான கோரிக்கை. பரிவுடன் கவனிக்கப்படும்.

தாம்பரம் மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

578 —(*வினா எண். 2758) **திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு துவங்க ஏதுவாக உதவி அறுவை மருத்துவரும் மற்றும் இதர பணியிடங்களும் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1986 ஏப்ரல் 26]

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதி ஒரு புறநகர் பகுதியாகும். சுற்று வட்டாரத்திலிருந்து ஒவ்வொரு நாளும் 500க்கும் மேற்பட்ட மக்கள் கிராமத்திலிருந்து தாம்பரத்திலே வநது சந்திக்கின்றதால் அவர்களுடைய அன்றாடத் தேவையான இந்த சுகாதாரத் துறையை தாம்பரத்தில் உடனடியாக விரைவுபடுத்துவதோடு மருத்துவமனைகளை இரவு நேரங்களில் அதிகப்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது தாம்பரம் மருத்துவமனையை பொறுத்தவரையில் 8 மருத்துவர்கள் இருக்கிறார்கள். அந்த இடங்களில் இப்போது மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீசஸ் அவர்கள் நமக்கு ப்ரபோசல்ஸ் அனுப்பி இருக்கிறார்கள். Opthalmlc, Orthopaedic and Paediatrics இந்த மூன்று பிரிவுகளை அங்கு ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் நமக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொல்லி இருக்கிறேன். தாம்பரம் மருத்துவமனை 120 படுக்கைகள் கொண்டதாகும். அங்கு 120 படுக்கைகள் இருந்தாலும் கூடுதலாக 40 பேர் அங்கே படுக்கையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நல்லவகையிலே அங்கே விஸ்தரிக்க வேண்டும் என்ற உறுப்பினரின் கோரிக்கையை அரசாங்கம் உடனடியாக பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு.

579—(*வினா எண். 4588) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31—3—1985 ஆண்டு வரை மாநிலத்தில் வேலை வாய்ப்பு கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே : (அ) இப்புள்ளி விவரங்கள் ஆண்டுக்கு இருமுறையே சேகரிக்கப்படுவதால் 30—6—1985 அன்று வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு